**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 செங்கல்பட்டு**

**சிசி எண்- 88-2017, அ.சா.5 -திரு.கே, முத்து த-பெ குப்பன் நாள்-04.03.2020.**

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

இந்த வழக்கு சம்பந்தமாக சிபிசிஐடி போலீஸ்சார் நான் திருவள்ளுவரில் டி.ஆர்.ஓ.வாக இருந்த போது போனில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்னர் நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்த போது தான் நான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டேன். தாலுக்கா அலுவலகங்களில் பெறப்படும் பட்டா கோரிய விண்ணப்பங்கள் பதிவேடுகள் 3(1) மற்றும் 3(2) வில் பதிவுகள் செய்யப்படும், சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த பெறப்படும் மனுக்கள் 3(1) பதிவேடுலும் மனுதாரர் நேரடியாக கொடுக்கும் மனுக்கள் 3(2) பதிவேட்டிலும் பதிவு செய்யப்படும். பட்டா வழங்கப்பட்டவுடன் அதற்கான தாலுக்கா பதிவேடுகளிலும் கிராம பதிவேடுகளிலும் 10(1) பதிவேட்டில் பதிவேற்றம் செய்யப்படும். அதசாஆ9 முதல் 12 வரையிலான ஆவணங்களை என்னை நீதிமன்றத்தில் முதல் முதலில் விசாரித்த போது தான் பார்த்தேன். அந்த ஆவணங்களில் உள்ள கையொப்பங்களை யார் செய்தார்கள் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை சம்பவம் நடந்தாக சொல்லப்படும் காலத்திலிருந்து 16,17 ஆண்டுகளிலிருந்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அதசாஆ 9 முதல் 12 வரையிலான ஆவணங்களில் கையொப்பங்கள் உள்ளது அது யார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது.

**இதே குறுக்கு விசாரணையை 1ம் மற்றும் 3 ம் எதிரி தரப்பபிலும் ஏற்றுக்கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டது.**

**மறு விசாரணை -** இல்லை.

Sd. (xxxx)

Typewritten to my dictation in open court lead over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxxx
Judicial Magistrate No.I
**Chengalpattu.**

**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 செங்கல்பட்டு</u>**

**சிசி எண்- 88|2017, அ.சா.6, திரு. காணிக்கைநாதன்**

**நாள்.03.02.2020**

**சாட்சி மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை**

நான் 2005 ஆம் ஆண்டு தாம்பரம் தாலுக்கா அலுவலகத்தில் உதவியாளராகப் பணி புரிந்தேன். எனக்கு பட்டாவிற்கு மனு செய்வது, அதன்மீது உத்தரவு பிறப்பிப்பது எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாலுக்கா அலுவலகத்தில் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்தைப் பொறுத்து நடராஜன் என்பவர் மனு செய்தாரா இல்லையா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பட்டா இருபக்கமும் அச்சிடப்பட்ட தாளாகத்தான் அரசால் வழங்கப்படும். என்னை விசாரணைக்கு காவல் துறையினர் அழைத்துச் சென்றபோது பட்டா எதையும் காட்டவில்லை என்றால் சரிதான். அதசாஆ 3 மற்றும் 4 ம் ஒருபக்கம்தான் அச்சிடப்பட்டுள்ளது பின்புறம் அச்சிடப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக பட்டா போன்ற ஆவணங்களில் வைக்கப்படும் முத்திரைகள் அரசால் வழங்கப்படும் முத்திரைமூலம் தான் வைக்கப்படும் என்பதால் அதன் உண்மைத்தன்மையை போலிஸ்தான் கண்டறிய வேண்டும் என்றால் சரிதான். அதசாஆ 4 பட்டாவில் உள்ள கையொப்பங்கள் யாருடையது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. (அதசாஆ 4 சாட்சியிடம் காட்டி கேட்கப்பட்டது).

**3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டது.

**1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஏற்கெனவே அதசாஆ 3 4 பட்டாக்களைக் குறித்து தாம்பரம் உரிமையியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அன்று தாசில்தார் இல்லாததால் என்னை கணக்கை ஒப்படைக்க கூறினார்கள். நான் சென்று கொடுத்தேன். என்னென்ன ஆவணம் என்று கேட்டார்கள் நான் அந்த ஆவணத்தைப் பற்றி கூறினேன். தாம்பரம் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கில் இந்த ஆவணங்களை நான்தான் குறியீடு செய்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை -** இல்லை

Sd. (xxxx)

Typewritten to my dictation in open court lead over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxxx
Judicial Magistrate No.I
**Chengalpattu.**